**I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE**
**DEPOSITIONS OF WITNESSES**
**(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)**
**DEPOSITIONS OF WITNESSES P.W.1**
**OS.NO.45/2021**

| | | |
|---|---|---|
| **NAME** | : | ரேவதி |
| **FATHER NAME** | : | |
| **VILLAGE** | : | |
| **TALUK** | : | |
| **CALLING** | : | |
| **RELIGION** | : | |
| **AGE** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act x of 1873 of 08.06.2023.**

குறுக்கு விசாரணை

இந்த வழக்கு யாருக்கு எதிராக தாக்கல் செய்துள்ளேன். சொத்தை பதிவு செய்து தருகிறேன் என சொன்னார்கள், ஆனால் பதிவு செய்து தரவில்லை அதனால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தை படித்துப் பார்த்துதான் தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கு எண் ஞாபகம் இல்லை. 2019லிருந்து பிரச்சனை போய்க்கொண்டிருக்கிறது. அப்போது வழக்கு போட்டேன். ஒரு ஐந்தாறு பக்கம் கையொப்பம் போட்டுக் கொடுத்தேன். என் தரப்பில் மொத்தம் எத்தனை ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் கிரய ஒப்பந்தம் 2, அவர்களுடைய கிரயப் பத்திரம், வில்லங்க சான்று, வரி கட்டிய ரசீது, இடம் சம்பந்தப்பட்ட ஆவணங்களை இணைத்து ஆவணங்களாக தாக்கல் செய்துள்ளேன். நான் பி.காம்., படித்துள்ளேன். என் கணவர் பிசினஸ் செய்கிறார். இதைத்தவிர வட்டித்தொழில் நான் செய்யவில்லை. பிரதிவாதியை எனக்கு திருமணம் ஆன காலத்திலிருந்து தெரியும். நான் பிரதிவாதிக்கு ரூ.10லட்ச ரூபாயை பணத்தை வட்டிக்கு வாங்கிதான் கொடுத்தேன். கிரய ஒப்பந்தம் போடுவதற்கு முன்னால் சொத்தை நேரில் பார்த்தேன். அந்த சொத்து என் வீட்டிற்கு பக்கத்தில்தான் உள்ளது. வழக்கு சொத்தில் கொஞ்சம் வீடு உள்ளது. அதற்குப் பக்கத்தில் கொஞ்சம் வெற்று நிலம் உள்ளது. இந்த விவரங்களை நான் வழக்கில் சொல்லவில்லை என்றால் அதற்குண்டான பத்திரத்தை கொடுத்துவிட்டேன். வழக்கு சொத்தின் சர்வே நெம்பர் ஞாபகம் இல்லை. வழக்கு சொத்தின் நீள, அகலம் ஒரு பக்கம் ஒரு பக்கம் 40, ஒரு பக்கம் 58 இருக்கும், தற்போது ஞாபகம் இல்லை. வழக்கு சொத்தின் மதிப்பு கைடுலைன் பார்த்துதான் ரூ.6லட்சம் அரசு மதிப்பு என பேசினார்கள். பிரதிவாதியின் சொந்தக்காரர்கள் இந்த சொத்து விலைக்கு வருவதாக கூறினார்கள். தினேஷ் எனக்கு சொந்தம் கிடையாது. வழக்கு சொத்து சம்பந்தமாக 2 அக்ரிமெண்ட் போட்டுள்ளேன். அவை பதிவு செய்யப்படவில்லை. 2019ல் ஒரு அக்ரிமெண்ட் போட்டோம். எனக்கு தேதி, மாதம் தெரியாது. முதல் அக்ரிமெண்ட்டை யார் தயார் செய்தது என்றால் என் கணவர் பதிவு அலுவலகத்தில் வாங்கி வந்தார், அதன்பிறகு அதை நிரப்பினோம். அதற்குப் பிறகு பிரதிவாதியிடம் சொல்லித்தான் அக்ரிமெண்ட் போட்டோம் அவர் கையொப்பம் போட்டார். பிரதிவாதியின் வீட்டில் அவரும், அவரது கணவரும் இருக்கும்போது வாங்கினோம். இந்த விவரம் வழக்கில் சொல்லப்படவில்லை என்றால் இல்லை. இந்த அக்ரிமெண்ட் பத்திரப்பதிவு அலுவலகத்தில்தான் தயார் செய்யப்பட்டது என்றால் சரி. இந்த அக்ரிமெண்ட் பத்திரப்பதிவு அலுவலகத்தில் தயார் செய்யப்படவில்லை என்றாலும் அதில் பத்திரம் எழுதியவர் பெயரே

..........2

இல்லை என்றாலும் தெரியாது. ஒரு அக்ரிமெண்ட் எழுதப்படவேண்டும் என்றால் என்னுடைய கையொப்பமும், பிரதிவாதி கையொப்பமும் இருக்க வேண்டும் என்பதாலும் என்னுடைய கையெழுத்தே இந்த அக்ரிமெண்டில் இல்லாத காரணத்தால் இந்த அக்ரிமெண்ட் செல்லாது என்றாலும் சரியல்ல. பிரதிவாதி மேல் வங்கியில் லோன் வாங்குவதற்காக இந்த அக்ரிமெண்ட்டை கேட்டார்கள், அதனால் போட்டோம். இந்த விவரத்தை வழக்கில் கூறவில்லை என்றால் சரி. அக்ரிமெண்ட்டை நான் படித்துப் பார்த்தேன். படித்துப் பார்த்துதான் அவர்கள் கையெழுத்து போட்டார்கள். முதல் அக்ரிமெண்ட் ரூ.20 பத்திரத்தில் எழுதினோம். அக்ரிமெண்ட் போடுவதற்கு எத்தனை நாளுக்கு முன்னால் அந்த பத்திர பேப்பரை வாங்கினோம் என்றால் 4 நாட்களுக்கு முன்னால் வாங்கினோம். அக்ரிமெண்ட் தேதியில்தான் பத்திரப்பேப்பரை வாங்கியுள்ளோம் என்றால் ரொம்ப வருடம் ஆனதினால் மறந்துவிட்டேன். முதல் அக்ரிமெண்ட்டில் தினேஷீம், தமிழ்ச்செல்வனும் சாட்சி கையொப்பம் போட்டுள்ளார்கள். நான் சொல்கிற பெயர்கள் தவறு என்றால் தேவிகா, தினேஷ் போட்டிருப்பார்கள் இல்லையென்றால் தேவிகா, தமிழ்ச்செல்வன் போட்டிருப்பார்கள். முதல் அக்ரிமெண்ட் போடும்போது சாந்தி, அவரது கணவர், நான் எனது கணவர், தினேஷ், ஊர்க்காரர்கள் 2 பேர் இருந்தோம். இந்த விவரம் வழக்கில் சொல்லியுள்ளேன். கிரயத்தொகை கொடுத்தபிறகுதான் அக்ரிமெண்ட்டில் கையொப்பம் போட்டார்கள். பணமாகத்தான் கொடுத்தோம். முதல் அக்ரிமெண்ட் போட்டபிறகு அந்த அக்ரிமெண்ட்டை ரத்து செய்யாமல் ஏன் இரண்டாவது அக்ரிமெண்ட் போட்டோம் என்றால் அந்த சொத்தை ஏற்கெனவே அடமானம் வைத்திருந்ததினால் செலவிற்கு தொகை வேண்டும் என கேட்டதால் கொடுத்தோம். இரண்டாவது அக்ரிமெண்ட் ஏன் ரூ.10,50,000/-ற்கு ஏன் போட்டோம் என்றால் பத்து லட்சத்திற்கு அதிகமாக அவர்கள் பணம் கேட்டதால் போட்டோம். முதல் அக்ரிமெண்ட் கெடு 6 மாதத்தில் முடிந்ததினால் 2 வது அக்ரிமெண்ட் போட்டோம். 2 வது அக்ரிமெண்டில் முதல் அக்ரிமெண்ட்டை பற்றி சொல்லியுள்ளீர்களா என்றால் சொல்லவில்லை. முதல் அக்ரிமெண்ட்டும் இரண்டாவது அக்ரிமெண்டும் 6 மாத இடைவெளியில் போட்டோம். 2019 முடிவில் போட்டோம். இரண்டாவது அக்ரிமெண்ட் போடும்போது ரூ.50,000–ம் அட்வான்ஸ் கொடுத்தோம். அந்த விவரத்தை நான் வழக்குரையில் கூறியுள்ளேன். இரண்டாவது அக்ரிமெண்ட்டை அவர்கள் வீட்டில் வைத்து போட்டோம். இரண்டாவது அக்ரிமெண்ட்டை நாங்களே தயார் செய்துகொண்டோம் என்றால் சரியல்ல. இரண்டாவது அக்ரிமெண்ட்டில் என்னுடைய கையொப்பம் இல்லாத காரணத்தால் இந்த அக்ரிமெண்ட் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இரண்டாவது அக்ரிமெண்ட் எழுதியபோது யார் யார் உடனிருந்தார்கள் என்றால் சாந்தி, அவருடைய மகன், நான், என் கணவர், என் சகோதரி மற்றும் ஊர்க்காரர்கள் இருந்தார்கள். 2 வது கிரய அக்ரிமெண்ட்டில் 3–4 பேர் கையொப்பம் போட்டுள்ளார்கள். தினேஷ், தமிழ்ச்செல்வன் மற்றவர்கள் பெயர் ஞாபகம் இல்லை. என்னுடைய வாக்குமூலத்தில் 32.01.2008 என காணப்படுகிறது என்றால் அப்படி ஒரு தேதி இல்லை என்றால் அது பிரண்டிங் தவறு. அவர்கள் என்னிடம் ஜெராக்ஸ் தான் கொடுத்தார்கள், ஒரிஜினல் தரவில்லை. பிரதிவாதி சாந்தி பெயரில் தான் பட்டா உள்ளது. பட்டா இந்த வழக்கில் போடப்படவில்லை என்றால் போட்டுள்ளேன். சொத்தை பதிவு செய்துதருமாறு பிரதிவாதியை எப்போது கேட்டீர்கள் என்றால் அக்ரிமெண்ட் போட்டதிலிருந்து 3 மாதம் கேட்டேன். அவருடைய கணவர் இறந்ததினால் பார்த்துக் கொள்ளலாம் என சொன்னார், அதனால் பிறகும் போய் கேட்டோம். இரண்டு தடவையும் நாங்கள் பதிவு அலுவலகம் சென்று திரும்பி வந்தோம். நேரில் பேசினோம், போனிலும் பேசினேன். அவர்கள் பதிவு செய்து தர முன்வரவில்லை. 3 தடவை போய் பார்த்தோம். நிறையதடவை நாங்கள் பேசியுள்ளோம். நான் அக்ரிமெண்ட்களில் சாட்சி கையொப்பம் போட்டுள்ளவர்களை விசாரிக்கிறேன். வழக்கறிஞர் அறிவிப்பு 2020ல் அனுப்பினேன். 2021ல் வழக்கு போட்டேன். 2021ல் மறுபடியும் ஒரு வழக்கறிஞர் ஏன் அனுப்பினேன் என்றால் அவர்கள் காலதாமதம் செய்துகொண்டிருந்ததினால் மற்றொரு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன். 9

.........3

மாதம் கால அவகாத்திற்கு பின்பு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதால் அது செல்லாது என்றால் சரியல்ல. வழக்கு போடுவதற்கு 1மாதத்திற்கு முன்னால் பார்த்தேன். 2019ம் வருட இறுதியில் பிரதிவாதியை பார்த்தேன். 2019ம் வருடம் முடிவதற்கு 2–3 மாத்ததிற்கு முன்னால் பிரச்சனை ஆரம்பித்தது. 2019–ல் 9வது மாதம், 10ம் மாதத்தில்தான் பிரச்சனை ஏற்பட்டது. 2019ல் 10வது மாதம் இரண்டாவது அக்ரிமெண்ட் போடப்பட்டது. அக்ரிமெண்ட் போட்டவுடன் ரிஜிஸ்டர் செய்துதருவதாக சொன்னார்கள். நாங்கள் பதிவாளர் அலுவலகத்திற்கு சென்றோம். ஆனால் அவர்கள் அதிகமாக பணம் கேட்டு நிறுத்திவிட்டார்கள். தினேஷ் கிரய ஒப்பந்தத்தில் சாட்சியாக கையொப்பம் போட்டுள்ளார். முதலாவது கையொப்பமா, 2வது கையொப்பம் போட்டாரா என ஞாபகம் இல்லை. என் கணவர் வேலை பார்ப்பதால் அவர் மூலமாகத்தான் பணம் வட்டிக்கு வாங்கினோம். சுரேஷிடம் சொத்தை அடமானம் போட்டுள்ளார். அவர் அடமானத்தை கேன்சல் செய்து கொடுத்தார். நான் ரூ.6,50,000/– சுரேஷிடம் நான்தான் கொடுத்தேன், பிரதிவாதியை அழைத்துச் சென்றுதான் கொடுத்தேன். இது சம்பந்தமாக ஆவணம் என்னிடம் இல்லை, நம்பிக்கையில்தான் பணம் கொடுத்தேன். இந்த விவரங்களை வழக்கில் சொல்லவில்லை. அடமானத்தை மீட்டதாக சொல்லியுள்ளேன். கணவர் உயிரோடு இருக்கும்போது ரூ.7லட்சம் என பேசினார்கள். அவர் இறந்தபின்பு அதிகமாக பணம் கேட்டார்கள். அவர்கள் வெற்று பேப்பரில் ஏமாற்றி கையொப்பம் வாங்கியதாக வழக்கறிஞர் அறிவிப்பு பொய்யாக கொடுத்தார்கள். வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் வழக்குரையில் சொத்து விவரம் தவறாக உள்ளது என்றால் நான் விஏஓவிடம் கேட்டபிறகுதான் நத்தமா இல்லையா என்ற விவரமே தெரியவந்தது. இரண்டாவது வழக்கறிஞர் அறிவிப்பில் சொத்து விவரம் கொடுக்கவில்லை. ஏனெனில் உள்ள அறிவிப்பில் சொத்து விவரம் கொடுத்ததால் கொடுக்கவில்லை. எனக்கு முதலில் நத்தமா இல்லையா என தெரியாத காரணத்தால் அந்த விவரத்தை அக்ரிமெண்டில் குறிப்பிடவில்லை. 2021ல் தான் பிரச்சனை அதிகமாக ஆரம்பித்தது, அதற்குப் பிறகு தெரியவந்தது. கிராம நத்தம் என்ற விவரத்தை விஏஓ அலுவலகத்தில் கேட்டு தெரிந்து கொண்டோம். கிராம நத்தம் என்பதற்கு ஏதாவது ரசீது கொடுத்தாரா என்றால் கொடுத்திருப்பார்கள். எங்கள் நண்பரிடம் வட்டிக்கு பணம் வாங்கினோம். என் கணவருக்குதான் பெயர் தெரியும், எங்கள் ஊர்தான். அவரையும் சாட்சியாக விசாரிக்கிறேன். கிரய பாக்கி தொகையை இதுவரை நீதிமன்றத்தில் டெபாசிட் செய்யவில்லை. பணம் என்னிடம் உள்ளதற்கான ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. சாந்தியிடம் நாங்கள் வட்டிக்கு பணம் வாங்கவில்லை. பிரதிவாதி வாங்கிய கடனை 90சதவிகிதம் கொடுத்துவிட்டார்கள் என்றாலும் நான் வெற்றுப் பேப்பரில் கையொப்பம் வாங்கி இந்த ஆவணங்களை தயார் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. வழக்கு மூலமே தவறாக உள்ளதால் இந்த வழக்கு தள்ளுபடியாகவேண்டும் என்றால் சரியல்ல. வழக்கு பொய்யானது என்றாலும் அதை தள்ளுபடிசெய்ய வேண்டும் என்றாலும் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சர்க்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று சொல்லி ஒப்புக்கொண்டு கையெழுத்திட்டார்.

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.